

॥ नवग्रहस्तोत्रम् ॥

॥ नवग्रहपीडाहरस्तोत्रम् ॥

நவக்ரஹ ஸ்தோத்ரம்

நவக்ரஹ பீடாஹர ஸ்தோத்ரம்

ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி : 51

ஸ்ரீ:

॥ नवग्रहस्तोत्रम् ॥

॥ नवग्रहपीडाहरस्तोत्रम् ॥

நவக்ரஹ ஸ்தோத்ரம்

நவக்ரஹ பீடாஹர ஸ்தோத்ரம்

ஸ்ரீ ராம ஜயம்
ஆவணி 6 உ



பிரசுரித்தவர்
ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1.

இரண்டாம் பதிப்பு : 1972

விலை : 30 ந.பை.

லிபர்ட்டி அச்சகம், சென்னை-1

ஸ்ரீ குருப்யோ நம:



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

॥ श्रीः ॥

नवग्रहस्तोत्रम्

நவக்ரஹ ஸ்தோத்ரம்

ஸூர்யன் :

जपाकुसुमसंकाशं काश्यपेयं महाद्युतिम् ।
तमोरिं सर्वपापघ्नं प्रणतोऽस्मि दिवाकरम् ॥ १ ॥

ஜபா குஸுமஸங்காஶம்
காஶ்யபேயம் மஹாத்யுதிம் |
தமோரிம் ஸர்வபாபக்நம்
ப்ரணதோ–ஸ்மி திவாகரம் || 1

செம்பருத்திப்பூ போன்ற நிறமுடையவனும் கஶ்யபமஹர்ஷியின் குமாரனும் மிக்க காந்தியுடையவனும் இருளைப் போக்குபவனும் எல்லா பாபங்களையும் அகற்றுபவனும் ஆகிய ஸூர்யனை நமஸ்காரம் செய்தவனாகிறேன்.

சந்திரன் :

दधिशङ्खतुषाराभं क्षीरोदार्णवसम्भवम् ।
नमामि शशिनं सोमं शम्भोर्मुकुटभूषणम् ॥ २ ॥

ததி ஶங்கதுஷாராபம்
க்ஷீரோதார்ணவ ஸம்பவம் |
நமாமி ஶஶினம் ஸோமம்
ஶம்போர்முகுட பூஷணம் || 2

தயிர் சங்கு பனி இவைபோன்ற காந்தியை யுடையவனும் பாற்கடலில் பிறந்தவனும் சிவ பெருமானுடைய தலையையலங்கரிப்பவனும் அமுத மயமுமான சந்திரனை வணங்குகிறேன்.

அங்காரகன் (செவ்வாய்):

धरणीगर्भसंभूत विद्युत्कान्तिसमप्रभम् ।
कुमारं शक्तिहस्तं तं मङ्गलं प्रणमाम्यहम् ॥ ३ ॥

தரணீ கர்ப்பஸம்பூதம்
வித்யுத் காந்தி ஸமப்ரபம் |
குமாரம் ஶக்தி ஹஸ்தம் தம்
மங்கலம் ப்ரணமாம்யஹம் ॥ 3

பூமிதேவியின் கர்ப்பத்தில் உண்டானவனும் மின்னலின் காந்தியைப்போன்ற காந்தியை யுடையவனும் சக்தி என்கிற ஆயுதத்தைக் கையில் உடையவனும் பூமியில் மன்மதன் போன்றவனு மான செவ்வாயை நான் வணங்குகிறேன்.

புதன்:

प्रियङ्गुकलिकाश्यामं रूपेणाप्रतिमं बुधम् ।
सौम्यं सौम्यगुणोपेतं तं बुधं प्रणमाम्यहम् ॥ ४ ॥

ப்ரியங்கு கலிகாச்யாமம்
ரூபேணாப்ரதிமம் புதம் |
ஸௌம்யம் ஸௌம்ய குணோபேதம்
தம் புதம் ப்ரணமாம்யஹம் ॥ 4

ஞாழலின் மொக்குபோல் பசுமைநிறமுடைய வனும் அழகில் ஒப்பிலாதவனும் வித்வானும்

சந்திரன்பிள்ளையாயும் பொறுமைக் குணத்தோடு கூடினவனுமான புதனை நான் வணங்குகிறேன்.

குரு :

देवानां च ऋषीणां च गुरुं काञ्चनसंनिभम् ।
बुद्धिभूतं त्रिलोकेशं तं नमामि बृहस्पतिम् ॥ ५ ॥

தேவாநாஞ்ச ருஷீணாஞ்ச
குரும் காஞ்சநஸந்நிபம் ।
புத்திபூதம் த்ரிலோகேஶம்
தம் நமாமி ப்ருஹஸ்பதிம் ॥ 5

தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் ஆசார்யனும் தங்கம் போன்றவனும் புத்தியே உருவெடுத்தவனும் மூவுலகுக்கு நாயகனுமான பிருஹஸ்பதியை வணங்குகிறேன்.

சுக்ரன் :

हिमकुन्दमृणालाभं दैत्यानां परमं गुरुम् ।
सर्वशास्त्रप्रवक्तारं भार्गवं प्रणमाम्यहम् ॥ ६ ॥

ஹிமகுந்த ம்ருணாலாபம்
தைத்யாநாம் பரமம் குரும் ।
ஸர்வ ஶாஸ்த்ர ப்ரவக்தாரம்
பார்கவம் ப்ரணமாம்யஹம் ॥ 6

பனி குருக்குத்திப்பூ தாமரைத்தண்டு இவை போன்ற காந்தியையுடையவனும் அஸுரர்களுக்கு பரமகுருவாயும் எல்லாசாஸ்திரங்களையும் சொல்பவராயும் இருக்கும் சுக்ரனை நான் நமஸ்கரிக்கிறேன்.

சனி:

नीलाञ्जनसमाभासं रविपुत्रं यमाग्रजम् ।
छायामार्ताण्डसंभूतं तं नमामि शनैश्चरम् ॥ ७ ॥

நீலாஞ்ஜனஸமாபாஸம்
ரவிபுத்ரம் யமாக்ரஜம் |
சாயா மார்தாண்ட ஸம்பூதம்
தம் நமாமி சனைஶ்சரம் || 7

கருத்த மைபோன்ற காந்தியை யுடையவனையும் ஸூர்யனுடைய பிள்ளையாயும் யமனுக்குத் தமையனையும் சாயாதேவிக்கும் ஸூர்யனுக்கும் பிறந்தவனையும் இருக்கிற சனியை நமஸ்காரம் செய்கிறேன்.

ராஹு:

अर्धकायं महावीर्यं चन्द्रादित्यविमर्दनम् ।
सिंहिकागर्भसंभूतं तं राहुं प्रणमाम्यहम् ॥ ८ ॥

அர்த்தகாயம் மஹாவீர்யம்
சந்த்ராதித்ய விமர்தனம் |
ஸிம்ஹிகா கர்ப்ப ஸம்பூதம்
தம் ராஹும் ப்ரணமாம்யஹம் || 8

பாதி ஶரீரமுடையவனும் மிகுந்த பலத்தை யுடையவனும் சந்திரனையும் ஸூர்யனையும் உபத்ரவிப்பவனும் ஸிம்ஹிகையினுடைய கர்ப்பத்தில் உண்டானவனுமான ராஹுவை நான் வணங்குகிறேன்.

கேது :

पलाशपुष्पसंकाशं तारकाग्रहमस्तकम् ।
रौद्रं रौद्रात्मकं घोरं तं केतुं प्रणमाम्यहम् ॥ ९ ॥

பலாஶ புஷ்பஸங்காஶம்
தாரகாக்ரஹமஸ்தகம் |
ரௌத்ரம் ரௌத்ராத்மகம் கோரம்
தம் கேதும் ப்ரணமாம்யஹம் ‖ 9

பலாஶ புஷ்பம்போன்றவனும் நக்ஷத்திரங்களுக்கும் க்ரஹங்களுக்கும் தலையானவனும் ருத்ராம்ஶமானவனும் க்ரூரமான மனதையுடையவனும் பயப்படுத்துபவனு மாகிய கேதுவை நான் நமஸ்கரிக்கிறேன்.

பலஶ்ருதி :

इति व्यासमुखोद्गीतं यः पठेत् सुसमाहितः ।
दिवि वा यदि वा रात्रौ विघ्नशान्तिर्भविष्यति ॥१०॥

இதி வ்யாஸ முகோத்கீதம்
ய:படேத் ஸுஸமாஹித: |
திவி வா யதிவா ராத்ரௌ
விக்ந ஶாந்திர்பவிஷ்யதி ‖ 10

இந்த ப்ரகாரம் வ்யாஸருடைய முகத்தினால் சொல்லப்பட்டதை ராத்ரியிலோ அல்லது பகலிலோ எவன் ச்ரத்தையுடன் கூடினவனாய் படிக்கிறானோ அவனுக்கு விக்நஶாந்தி உண்டாகும்.

नरनारीनृपाणां च भवेद्दुःखप्रणाशनम् ।
ऐश्वर्यमतुलं तेषामारोग्यं पुष्टिवर्धनम् ॥ ११ ॥

நரநாரீ ந்ருபாணாஞ்ச
பவேத் து:கப்ரணாஶநம் |
ஐச்வர்ய மதுலம் தேஷாம்
ஆரோக்யம் புஷ்டிவர்த்தநம் || 11

ஆண் பெண் அரசன் இவர்களுக்கு துகத்தனிவு உன்டாகும். அவர்களுக்கு ஒப்பில்லாத ஐஶ்வர்யமும் வ்யாதியின்மையும் செல்வஸம்ருத்துதியும் உண்டாகும்.

ग्रहनक्षत्रजाः पीडास्तस्कराग्निसमुद्भवाः ।
ताः सर्वाः प्रशमं यान्ति व्यासो ब्रूते न संशयः ॥ १२ ॥

க்ரஹநக்ஷத்ரஜா: பீடா:
தஸ்கராக்நிஸமுத்பவா: |
தாஸ்ஸர்வா: ப்ரஶமம் யாந்தி
வ்யாஸோ ப்ரூதே ந ஸம்ஶய: || 12

க்ரஹங்கள் நக்ஷத்ரங்கள் இவர்களால் உண்டாகுவதும் திருடன் அக்நி இவர்களால் உண்டாகுவதுமான எல்லாபீடைகளும் தணிவை அடைகின்றன. வ்யாஸ மஹர்ஷி சொல்கிறார், ஸம்சயம் இல்லை.

इति श्रीव्यासविरचितं नवग्रहस्तोत्रं संपूर्णम् ॥

இதி ஶ்ரீவ்யாஸ விரசிதம் நவக்ரஹ
ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

இம்மாதிரி வியாஸர் எழுதிய நவக்ரஹ
ஸ்தோத்ரம் முடிவு பெற்றது.

|| श्रीः ||

नवग्रहपीडाहरस्तोत्रम्

நவக்ரஹ பீடாஹர ஸ்தோத்ரம்

ஸூர்யன் :



ग्रहाणामादिरादित्यो
लोकरक्षणकारकः ।
विषमस्थानसंभूतां
पीडां हरतु मे रविः ॥ १ ॥

க்ரஹாணா மாதிராதித்யோ
லோகரக்ஷண காரக: |
விஷமஸ்தானஸம்பூதாம்
பீடாம் ஹரது மே ரவி: || 1

க்ரஹங்களுக்குத் தலைவனும் லோகரக்ஷணத்தைச் செய்பவனுமான ஸூர்யன் எனக்குக் கெடுதலையான இடத்தினால் உண்டாகும் பீடையைப் போக்கட்டும்.



சந்திரன் :

रोहिणीशः सुधामूर्तिः
सुधागात्रः सुधाशनः ।
विषमस्थानसंभूतां
पीडां हरतु मे विधुः ॥ २ ॥

ரோஹிணீஶஸ்ஸுதா மூர்த்தி:
ஸுதாகாத்ரஸ்ஸுதாஶந: |

விஷமஸ்தாநஸம்பூதாம்
பீடாம் ஹரது மே விது: ‖ 2

உள்ளிலும் வெளியிலும் அம்ருதமூர்த்தியாயும் அம்ருதத்தை ஆஹாரமாக உடையவனும் இருக்கிற சந்திரன் எனக்குக் கெடுதலையான இடத்தில் உண்டாகும் பீடையைப் போக்கட்டும்.



அங்காரகன் (செவ்வாய்):

भूमिपुत्रो महातेजाः
जगतां भयकृत् सदा ।
वृष्टिकृद्वृष्टिहर्ता च
पीडां हरतु मे कुजः ॥ ३ ॥

பூமிபுத்ரோ மஹாதேஜா:
ஜகதாம் பயக்ருத் ஸதா |
வ்ருஷ்டிக்ருத் வ்ருஷ்டிஹர்தா ச
பீடாம் ஹரது மே குஜ: ‖ 3

பூமியின் பிள்ளையாயும் மிக்க எழிலையுடையவனும் மழையை உண்டு பண்ணுபவனும் மழையைத் தடுப்பவனுமான குஜன் என்னுடைய பீடையைப் போக்கட்டும்.



புதன்:

उत्पातरूपो जगतां चन्द्रपुत्रो महाद्युतिः ।
सूर्यप्रियकरो विद्वान् पीडां हरतु मे बुधः ॥ ४ ॥

உத்பாதரூபோ ஜகதாம்
சந்த்ர புத்ரோ மஹாத்யுதி: |
ஸூர்ய ப்ரிய கரோ வித்வான்
பீடாம் ஹரது மே புத: || 4

உலகங்களுக்குக் கெடுதலையைச்செய்யும் உருவமுடையவனும் சந்திரனுடைய பிள்ளையாயும் மிகுந்த காந்தியையுடையவனும் ஸூர்யனுக்கு இஷ்டத்தைச் செய்பவனும் வித்துவானுமான புதன் என்னுடைய பீடையைப் போக்கட்டும்.

குரு:



देवमन्त्री विशालाक्षः
सदा लोकहिते रतः ।
अनेकशिष्यसंपूर्णः
पीडां हरतु मे गुरुः ॥ ५ ॥

தேவமந்த்ரீ விஶாலாக்ஷ:
ஸதா லோகஹிதே ரத: |
அநேக ஶிஷ்யஸம்பூர்ண:
பீடாம் ஹரது மே குரு: || 5

தேவர்களுக்கு மந்த்ரியாயும் அகன்ற கண்களை யுடையவராயும் எப்போதும் உலகத்துக்கு நன்மை செய்வதில் ஊக்கங்கொண்டவராயும் வெகு சீடர்கள் நிறைந்தவருமான குரு என்னுடைய பீடையைப் போக்கட்டும்.

சுக்கிரன் :



दैत्यमन्त्री गुरुस्तेषां
प्राणदश्च महामतिः ।
प्रभुस्ताराग्रहाणां च
पीडां हरतु मे भृगुः ॥ ६ ॥

தைத்ய மந்திரீ குருஸ் தேஷாம்
ப்ராணதஸ்ச மஹாமதி: |
ப்ரபுஸ்தாராக்ரஹாணாஞ்ச
பீடாம் ஹரது மே ப்ருகு: || 6

அஸுரர்களுக்கு மந்த்ரியாயும் அவர்களுக்கு ப்ராணன்களைக் கொடுப்பவராயும் நக்ஷத்ரங்களுக்கும் க்ரஹங்களுக்கும் நியாமகராயும் உள்ள ஶுக்ரன் என்னுடைய பீடையைப் போக்கட்டும்.

சனி :

सूर्यपुत्रो दीर्घदेहो
विशालाक्षः शिवप्रियः ।
मन्दचारः प्रसन्नात्मा
पीडां हरतु मे शनिः ॥ ७ ॥



ஸூர்ய புத்ரோ தீர்க்கதேஹோ
விஶாலாக்ஷஶ்ஶிவப்ரிய: |
மந்தசார: ப்ரஸந்நாத்மா
பீடாம் ஹரது மே ஶநி: || 7

ஸூர்யனுடைய பிள்ளையாயும் நீண்ட தேஹத்தை யுடையவனும் அகன்ற கண்களை யுடையவனும் சிவனுக்கு இஷ்டமானவனும் மந்தமான கதியை யுடையவனும் தெளிவான மனதையுடையவனுமான சனி என்னுடைய பீடையைப் போக்கட்டும்.

கேது :



महाशिरा महावक्त्रो
दीर्घदंष्ट्रो महाबलः ।
वतनुश्चोर्ध्वकेशश्च
पीडां हरतु मे शिखी ॥८॥

மஹாஶிரா மஹாவக்த்ரோ
தீர்க்க தம்ஷ்ட்ரோ மஹாபல:
வதநுஸ் சோர்த்வ கேஶஸ்ச
பீடாம் ஹரது மே ஶிகீ ॥ 8

பெரிய தலையையுடையவனும் நீண்ட கோரப் பற்களையுடையவனும் மிக்க பலமுடையவனும். மேல்நோக்கிய மயிரை யுடையவனுமான கேது என்னுடைய பீடையைப் போக்கட்டும்.

ராஹு:



अनेकरूपवर्णश्च
शतशोऽथ सहस्रशः ।
उत्पातरूपो जगतां
पीडां हरतु मे तमः ॥ ९ ॥

அனேக ரூபவர்ணய்ச
ஶதஶோऽத ஸஹஸ்ரஶ: |
உத்பாத ரூபோ ஜகதாம்
பீடாம் ஹரது மே தம: || 9

பல உருவங்களையும் நிறங்களையும் உடையவனும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் உலகங்களுக்குக் கெடுதலையைச்செய்யும் உருவமுடையவனுமான ராஹு என்னுடைய பீடையைப் போக்கட்டும்.

इति ब्रह्माण्डपुराणोक्तं नवग्रहपीडाहरस्तोत्रं संपूर्णम् ॥

இதி ப்ரஹ்மாண்டபுராணோக்தம்
நவக்ரஹ பீடாஹர ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

இம்மாதிரி ப்ரஹ்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்ட நவக்ரஹ பீடாஹரஸ் தோத்ரம் முடிவுபெற்றது.

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின்

சில முக்கிய வெளியீடுகள்

ஒவ்வொரு புத்தகமும் பல படங்களுடனும் ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யர்களுடைய அநுக்ரஹ பூர்வகமான ஸ்ரீமுகத்துடனும் கூடியது.

	ரூ.	பை.
ஸ்ரீ தேவீ ஸ்தோத்ர ரத்னாகரம் (பன்னிரண்டு ஸ்தோத்ரங்கள் அடங்கியது)	2	00
ஸ்ரீ மூகபஞ்சசதீ (நாகரி லிபியில் மூலமும் தமிழ் அனுவாதமும்)	2	50
ஸ்ரீ சம்புநடனம்—நடேசாஷ்டகம்	0	30
நவக்ரஹ ஸ்தோத்ரம்—நவக்ரஹ பீடாஹர ஸ்தோத்ரம்	0	50
ஸ்ரீ ச்யாமலா தண்டகம்	0	50
நவரத்ன மாலா	0	25
மந்த்ர மாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம்	0	50
ஸ்ரீ ராஜராஜேச்வரீ அஷ்டகம்	0	25
அம்பாஷ்டகம்	0	30
ஆனந்தலஹரீ	0	50
ஸ்ரீ மீனாக்ஷீ ஸ்தோத்ரம்	0	25
ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரம்	0	20
ஸ்ரீ அன்னபூர்ணாஷ்டகம்	0	20
ஸ்ரீ அம்பா பஞ்சரத்னம்	0	20
ஸ்ரீ கனகதாரா ஸ்தவம்	0	25
ஸ்ரீ காமாக்ஷீ ஸ்தோத்ரம்	0	25
ஸ்ரீ க்ருஷ்ண ஸ்துதி	0	20
ஸ்ரீ வைத்யநாத ஸ்தோத்ரம்	0	25
ஸ்ரீ பஜகோவிந்தம்—ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் அனுவாதமும்	0	60
ஸ்ரீ முகுந்த மாலை—ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் உரையும் கூடியது	0	60
ஸ்ரீ ப்ரச்நோத்தர ரத்னமாலிகா—ஸ்ரீ சங்கர பகவத்பாதர் இயற்றியது (தமிழ் லிபியில்)	0	50
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்—தேவநாகரி, தமிழ் லிபிகளில் மூலமும், தமிழ் அனுவாதமும்	2	50
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமும், நாமாவளியும்—ஸம்ஸ்க்ருதத்தில்	0	40
ஷை—தமிழில் ஸ்தோத்ரமும், நாமாவளியும்	0	40
ஸ்ரீ விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம்—ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் ஆங்கில அனுவாதங்களும், ...	1	50
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்—ஸ்ரீஸுரேச்வராசார்யர்களின் மானஸோல்லாஸ வார்த்திகத்துடன் கூடியது	1	75
ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யபுஜங்க ஸ்தோத்ரம்	0	40

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1.